இருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டதாக முன்னாள் நடிகையும் எம்.பி.யுமான சுமலதா தெரிவித்துள்ளார்.

காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவுப்படி கடந்த 19ம் தேதி முதல் கிருஷ்ணராஜ சாகர் அணையில் இருந்து கர்நாடகா நீர் திறந்து வருகிறது.

இந்நிலையில், மாண்டியா தொகுதி எம்பியும், முன்னாள் நடிகையுமான சுமலதா தனது முகநூலில் கருத்து ஒன்றை பதிவிட்டுள்ளார்.

அதில் மத்திய நீர்வளத்துறை அமைச்சர் கஜேந்திர சிங்கிற்கு அணைகளில் நீர் திறக்குமாறு கடிதம் எழுதியதாகவும், அதன் அடிப்படையில்தான் தமிழகத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டதாகவும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு மதச்சார்பற்ற ஜனதா தளம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

சென்னை அரும்பாக்கத்தில் நேற்று கல்லூரி மாணவர்கள் ''ரூட் தல'' மோதல் தொடர்பாக வாட்ஸ் ஆப்பில் வீடியோ பரவி வருகிறது.

அரும்பாக்கம் அருகே பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் நேற்று இரு குழுக்களாக பிரிந்து பட்டாக்கத்திகளுடன் மோதிக்கொண்டனர். இதில் அந்த கல்லூரியில் 2ம் ஆண்டு தத்துவவியல் படிக்கும் மாணவர் வசந்தகுமார் படுகாயங்களுடன் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சமூக வலைதளங்களில் மாணவர்கள் கத்தியுடன் ஆவேசமாக பாய்ந்து வெட்டும் வீடியோ காட்சிகள் வெளியாகி பெரும் பதட்டத்தை ஏற்படுத்தியது.

இந்த சம்பவம் தொடர்பாக சென்னை அண்ணாநகர் துணை கமிஷனர் முத்துசாமி மேற்பார்வையில் அரும்பாக்கம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். சம்பவ இடத்துக்கு போலீசார் சென்ற போது இதனைத் தொடர்ந்து சிசிடிவி கேமரா மூலம் போலீசார் தேடுதல் வேட்டை நடத்தி பச்சையப்பன் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் திருவள்ளூர் மாவட்டத்தை சேர்ந்த சுருதி, பெரியபாளையம் பகுதியை சேர்ந்த மதன் ஆகிய இருவரையும் நேற்று இரவு கைது செய்தனர்.

இந்நிலையில் தற்போது சமூக வலைதளங்களில் மாணவர்கள் ''ரூட் தல'' மோதல் தொடர்பான வீடியோ ஒன்று பரவி வருகிறது. இதில் ''ரூட் தல'' விவகாரத்தில், கல்லூரி மாணவர் ஒருவரை அரை நிர்வாண கோலத்தில் காட்டுப்பகுதியில் அமர வைத்து ''53 ரூட்டுக்கு ஜே'' என சொல்ல சொல்லி 108 முறை எழுத வற்புறுத்தும் காட்சிகள் இடம் பெற்றுள்ளன.

நேற்று நடந்த மோதல் தொடர்ச்சியாக இது நடந்ததா என்ற கோணத்தில் போலீஸ் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த காட்சிகள் வாட்ஸ்ஆப் மூலம் வைரலாக பரவி வருகிறது. அந்த மாணவர் யார் என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.


**ஈசாப் இந்தியா லிமிடெட்** ESAB

CIN:L29299TN1987PLC058738

பதிவு அலுவலகம் : எண் 13, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை- 600 058.

தொ.பேசி எண். 044-4228 1100

இ-மெயில்: investor.relations@esab.co.in

**அறிவிப்பு**

SEBI (பட்டியலிடும் கடமைகள் மற்றும் அறிவித்தல் தேவைகள்) நிபந்தனைகள், 2015, நிபந்தனை 47 மற்றும் நிபந்தனை 29ன் படி ஜூன் 30, 2019 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் அளிப்பதற்கு கம்பெனியின் இயக்குனர் குழுக் கூட்டம் ஆகஸ்ட் 13, 2019 செவ்வாய்கிழமை அன்று, சென்னையில் உள்ள தி அக்கார்டு மெட்ரோபொலிட்டன் ஹோட்டலில் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்சொன்ன அறிவிப்பு கம்பெனியின் www.esabindia.com என்ற இணைய தளத்திலும், பங்கு வர்த்தக நிறுவனங்களின் www.bseindia.com மற்றும் www.nseindia.com என்ற இணையதளங்களிலும் வெளியிடப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இயக்குனர் குழுவின் சார்பாக
S. வெங்கடகிருஷ்ணன்
நிறுவன செயலாளர்

சென்னை
24 ஜூலை, 2019


**IN TH III ASST. CITY CIVIL COURT AT CHENNAI**
**I.A.No.9981 of 2018**
**In**
**O.S.No.2712 of 2014**

Smt. R[illegible]wari
... Petitioner/Plaintiff
Vs
N.P.N. Saravanan & 2 others
... Respondents/Defendants

To:
1.N.P.N.Saravabab
2.N.S.N.Gurunathan
S/o.Nithyanandam
Both are residing at:
No.9 (Old No.19),
Swami Neelakandanayanar Street, Kondithoppu,
Chennai - 600 079.

Kindly take notice for appearance of the 1st to 2nd of you (Respondents/Defendants 1 & 2) on 22.08.2019 at 10.30 a.m. in the above case in I.A.No.9981/2018 in O.S.No.2712/2014, filed for restoration of the suit, either in person or through an Advocate or otherwise the above case will be heard and decided in the absence the 1st to 2nd of you (Respondents/Defendants 1 & 2) by setting an exparte.

R.THANJAN
COUNSEL FOR PETITIONER/ PLAINTIFF

## பொன்னி சுகர்ஸ் (ஈரோடு) லிமிடெட்

CIN:L15422TN1996PLC037200

பதிவு அலுவலகம்: "எஸ்வின் ஹவுஸ்",
13 ராஜீவ் காந்தி சாலை (OMR) பெருங்குடி,சென்னை 600 096
தொலைபேசி: 044-39279300 தொலைநகல்: 044-24960156
மின்னஞ்சல்: admin@ponnisugars.com இணையதளம்: www.ponnisugars.com
முதலீட்டாளர்கள் குறை தீர்க்கும் மின்னஞ்சல்: investor@ponnisugars.com

ISO 9001/14001 CERTIFIED

**30-06-2019 அன்றுடன் முடிந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதி நிலை முடிவுகள்**

(ரூ. லட்சங்களில்)

| விவரங்கள் | 30.06.2019ல் முடிந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாதது) | 31.03.2019ல் முடிந்த காலாண்டு (தணிக்கை செய்யப்பட்டது) | 30.06.2018ல் முடிந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாதது) | 31.03.2019ல் முடிந்த ஓராண்டு (தணிக்கை செய்யப்பட்டது) |
|---|---|---|---|---|
| செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 6757 | 8339 | 2035 | 18796 |
| காலத்திற்கான நிகர லாபம்/(நட்டம்) (வரி மற்றும் அபூர்வமான விவரங்களுக்கு முன்னால்) | 80 | 856 | (233) | 1333 |
| வரிக்கு முன்னால் காலத்திற்கான நிகர லாபம் / (நட்டம்) (அபூர்வமான விவரங்களுக்குப் பின்) | 80 | 723 | (233) | 1200 |
| காலத்திற்கான நிகர லாபம்/(நட்டம்) (வரி மற்றும் அபூர்வமான விவரங்களுக்குப் பின்) | 50 | 477 | (165) | 843 |
| காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [இதில் காலத்திற்கான லாபம்/(நட்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்)அடங்கும்] | (356) | (1534) | 381 | 2084 |
| சமபங்கு மூலதனம் | 860 | 860 | 860 | 860 |
| கடந்த ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலை குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ள இதர சம உரிமையுள்ள ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக) | - | - | - | 28408 |
| ஒரு பங்கிற்கான (ஒவ்வொன்றும் ரூ.10/- முகமதிப்பு) அடிப்படை மற்றும் நீர்த்துப்போன வருமானம் | 0.58 | 5.55 | (1.92) | 9.80 |

குறிப்பு:

மேற்கண்ட விவரங்கள், செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளியீடு தேவைகள்) கட்டுப்பாடுகள், 2015, கட்டுப்பாடு 33ன்கீழ் பங்குச் சந்தைகளில் நிறுவனம் தாக்கல் செய்துள்ள காலாண்டிற்கான விரிவான நிதிநிலை முடிவுகளின் சாராம்சமாகும். முழு விவரங்கள், நிறுவனத்தின் இணையதளத்திலும் (www.ponnisugars.com) மற்றும் பங்குச் சந்தைகளின் இணையதளத்திலும் (www.bseindia.com & www.nseindia.com) பதிவேற்றப்பட்டுள்ளன.

பொன்னி சுகர்ஸ் (ஈரோடு) லிமிடெட்டுக்காக

சென்னை
23.07.2019

நா.இராமநாதன்
நிர்வாக இயக்குநர்